**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – தேசிய ஆசிரியர் கல்வி குழுமம் (NCTE) விதிகளின்படி முழுகல்வித் தகுதி பெற்று 8 ஆண்டுகள் பணி முடிக்காத 800 கணினி பயிற்றுநர் நிலை IIஇல் உள்ள கணினி பயிற்றுநர்களை 8 ஆண்டுகள் பணி முடிக்க வேண்டும் என்ற நிபந்தனையின்றி கணினி பயிற்றுநர் நிலை–Iஆக தரமுயர்த்த அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது – அரசாணைக்கு தெளிவுரை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித் (பக7(1)) துறை**

அரசாணை (நிலை) எண்.107

நாள்:17.11.2020
திருவள்ளுவர் ஆண்டு – 2051
சார்வரி வருடம், கார்த்திகை 2
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.26 பள்ளிக் கல்வி(பக7(1))த் துறை, நாள்.12.02.2019.
2. அரசாணை (நிலை) எண்.103 பள்ளிக் கல்வி(பக7(1))த் துறை, நாள்.05.11.2020.
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.8095/வி1/இ2/2019, நாள்.09.11.2020.

*****

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கணினி பயிற்றுநர் நிலை–Iஆக தரமுயர்த்துவதற்கு கணினி பயிற்றுநர் நிலை–IIஇல் உள்ள கணினி பயிற்றுநர்கள் தேசிய ஆசிரியர் கல்வி குழுமம் (NCTE) விதிகளின்படி முழுகல்வித் தகுதி பெற்று 8 ஆண்டுகள் பணிமுடித்திருக்க வேண்டும் என்று நிபந்தனை வழங்கி அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், அரசாணை (நிலை) எண்.26 பள்ளிக் கல்வித் துறை நாள்.12.02.2019–ன்படி கணினி பயிற்றுநர் நிலை–Iஆக தரமுயர்த்துவதற்கு கணினி பயிற்றுநர் நிலை–IIஇல் உள்ள கணினி பயிற்றுநர்கள் தேசிய ஆசிரியர் கல்வி குழுமம் (NCTE) விதிகளின்படி முழுகல்வித் தகுதி பெற்று 8 ஆண்டுகள் பணிமுடித்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையின்றி கணினி பயிற்றுநர் நிலை–Iஆக தரமுயர்த்த அனுமதி வழங்கி அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. திருமதி.கே.குணவதி மற்றும் 20 நபர்கள், திருமதி.E.சந்திரவதனா மற்றும் 10 நபர்களால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நீதிப்பேராணை மனு எண்கள்.6220/2019 மற்றும் 7835/2019–ன் மீது பெறப்பட்ட 13.02.2020 நாளிட்ட தீர்ப்பாணையை செயல்படுத்துவது குறித்து வழக்கு மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் விசாரணைக்கு வந்த போது, கணினி பயிற்றுநர் நிலை–Iஆக தரமுயர்த்தப்படும் கணினி பயிற்றுநர்களுக்கு அரசாணை (நிலை) எண்.26 பள்ளிக் கல்வி(பக7(1))த் துறை

நாள்.12.02.2019–ன்படி, மேற்படி அரசாணை வெளியிடப்பட்ட நாள் முதல் பணிப்பலன் மற்றும் பணப்பலன்கள் வழங்கும் வகையில் உரிய தெளிவுரை வழங்கி ஆணை வெளியிடுமாறு அறிவுறுத்தியதின் அடிப்படையில் உரிய தெளிவுரை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசினைக் கோரியுள்ளார்.

4. மேற்கண்ட சூழ்நிலையில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியதன் அடிப்படையில், பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, அரசாணை (நிலை) எண்.26 பள்ளிக் கல்வித் துறை நாள்.12.02.2019–ன்படி தேசிய ஆசிரியர் கல்வி குழுமம் (NCTE) 2014 விதிமுறைகளின்படி முழுகல்வித் தகுதி பெற்று 8 ஆண்டுகள் பணிமுடிக்காத 800 கணினி பயிற்றுநர் நிலை–IIஇல் உள்ள கணினி பயிற்றுநர்கள் 8 ஆண்டுகள் பணி முடிக்க வேண்டும் என்ற நிபந்தனையின்றி கணினி பயிற்றுநர் நிலை–Iஆக தரமுயர்த்தி வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.103 பள்ளிக் கல்வி (பக7(1))த் துறை நாள்.05.11.2020ன்படி தரமுயர்த்தப்படும் நிலை–II கணினி பயிற்றுநர் பணியிடங்கள் அரசாணை (நிலை) எண்.26 பள்ளிக் கல்வி (பக7(1))த் துறை நாள்.12.02.2019 வெளியிடப்பட்ட நாளான 12.02.2019–ஆம் நாள் முதல் கணினி பயிற்றுநர் நிலை–Iஆக தரமுயர்த்தப்படுகிறது எனவும், அந்நாள் முதல் இவ்வாறு தரமுயர்த்தப்பட்ட கணினி பயிற்றுநர்களுக்கு பணிப்பலன் மற்றும் பணப்பலன்களை வழங்கலாம் எனவும் தெளிவுரை வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.42585/நிதி (கல்வி–II) துறை/2020 நாள் 16.11.2020–இல் வெளியிடப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தீரஜ் குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை – 6.
தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை–6
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்

நகல்
நிதி (கல்வி–II/மை.ம.ஆ.பி)த் துறை, சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர்,
சென்னை – 9
பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை 9
அரசு சிறப்பு வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றம்,சென்னை–104.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

17/11/2020

பிரிவு அலுவலர்
17/11/2020